**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.289/2014

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. வள்ளியாத்தாள் | வயது:48 |
| க/பெ. : திரு. பொன்னுசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர். பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி. ஏற்கனவே 12.3.2024 ம் தேதி முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து இருந்தேன். ஆவணங்கள் குறியீடு செய்யவில்லை. தற்போது தாவா மீண்டும் கோப்புக் எடுக்கப்பட்ட பிறகு நீதிமன்றம் கூடுதல் எழு வினாக்களை வழங்கியுள்ளது. ஆகையால் தற்போது நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 21.8.1946 – பழைய கவுண்டர் மக்கள் இடையே ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 1** |
| 4.12.1980 – கண்ணம்மாள் பெயரில் ஏற்பட்ட தான செட்டில் மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 2** |
| 25.4.2010 – தங்கமுத்து இறப்பு சான்றிதழ் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 3** |

| | | |
|---|---|---|
| 1.3.2014 – வாதி, 1 முதல் 10 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் | **வா.சா.ஆ 4** |
| 1 முதல் 9 பிரதிவாதிகள் சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை– 8 எண்ணிக்கை | | **வா.சா.ஆ 5** |
| 22.12.2011 – திருப்பூர் மாவட்ட உரிமையில் நீதிமன்றம் அ.வ.எண். 459/2010 ல் ஏற்படுத்திய தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 6** |

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் கோரியதால். முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.01.27 19:35:25 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.